21 ஏப்ரல் 2024
ஈஸ்டர் காலத்தின் 4 ஆம் ஞாயிறு
(நல்லாயன் ஞாயிறு)

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக பெண்களின் மதிப்பையும் மாண்பையும் கொண்டாடுதல்

# என் ஆடுகள் என்னை அறிந்துள்ளன



**இதயத்தைத் தொடும் இந்தக் கதையில் கூறப்பட்டிருக்கும் ஒரு நல்ல ஆயனை கற்பனைசெய்துபாருங்கள்.**

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இளம் தாய் தனது கைக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு தெற்கு வேல்ஸ் மலைகளின் வழியாக நடந்துசென்று கொண்டிருந்தார். பனிப்புயல் மிகவும் கடுமையாக அவர்களைத் தாக்கியது. இதனால் அவர்களால் தங்களுடைய இலக்கைச் சென்றடையமுடியவில்லை. முடிவில் மீட்புப்பணியாளர்கள் அவர்களைத் தேடியபோது, தாயின் உயிரற்ற உடலைக் கண்டார்கள். ஆனால் குழந்தை தாயின் உடலின் கதகதப்பில் புதைந்து உயிரோடு இருந்தது.

அந்தத் தாய் தன்னுடைய வெளிப்புற அங்கியாலும் சால்வையாலும் குழந்தையைப் போர்த்தி, தன் உடலோடு அந்த குழந்தையை அரவணைத்திருந்தார். அந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் வளர்ந்து பெரியவனாகிய இங்கிலாந்தின் பிரதம மந்திரியான டேவிட் லாயிட்ஸ் ஜோர்ஜ். (Today in the Word, January, 1998, p. 10).

வீட்டிற்கு அருகாமையில் நல்லாயனின் சபையைச் சேர்ந்த லேடி ஆஃப் சாரிட்டிசபை உள்ளது. (வேறு பல சபைகளும் உள்ளன) இங்குள்ள கன்னியர்கள் , குறிப்பாக பெண்கள், மற்றும் குழந்தைகளின் வாழ்வை வளமாக்குவது. அவர்களின் மாண்பையும், உரிமைகளையும் மீட்டெடுப்பது மற்றும் அநீதி, அடக்குமுறை மற்றும் அந்நியப்படுத்துதலுக்கு எதிராக இருக்கும் அனைத்தையும் மீட்டெடுக்கும் ஒப்புரவு பணியை மேற்கொள்கிறார்கள். https://gssmmission.wordpress.com

இன்று நல்லாயன் ஞாயிறைக் கொண்டாடும்போது, தன்னலமற்ற பெண்கள் மற்றும் ஆண்கள் தங்களுடைய வசதியான வாழ்க்கையைத் துறந்து உதவி தேவைப்படுவோருக்குப் பணிசெய்ய முன்வருவதை நாம் அறிவோம். அவர்களின் கதையை நாம் கேட்கும்போது, நாம் அறிந்துகொள்வது ஒன்றுதான். அவர்கள் இறைவனோடு கொண்டிருக்கும் நெருக்கம் தான். ஆண்டவரும் இதையே உறுதிப்படுத்துகிறார். “என் ஆடுகள் என்னை அறிந்துள்ளன”

திருஅவையின் தூதுப்பணி, நல்ல ஆயனைப் பின்பற்ற நம்மை அழைக்கிறது. இது அருள்பணியாளர்கள் மற்றும் துறவறத்தினருக்கு மட்டுமல்ல; நம் ஒவ்வொருவருக்கும் இந்த அழைப்பு விடுக்கப்படுகிறது. பேதுரு ஆண்டவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தார்; வாழும்போது மூலைக்கல்லான ஆண்டவரையே சுவாசித்தார். பேதுரு அவரின் ஆயனை அறிந்திருந்தார். அவரைப் பின்சென்றார். அவரின் பாதையான சிலுவையின் பாதையைத் தேர்ந்தெடுத்தார். உண்மையில் “என் ஆடுகள் என்னைஅறிந்துள்ளன”

நல்ல ஆயனை நாம் பின்தொடரவேண்டுமா? இன்றைய இரண்டாம் வாசகம் 1 யோவானில் அவர் கூறுகிறார். “நம் தந்தை, நம்மிடம் எத்துனை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம்; கடவுளின் மக்களாகவே இருக்கிறோம்” எ அவரின் பிள்ளைகள் என்பது நமக்கான உரிமை.

பெண்கள் தாங்கள் மதிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்த அவர்களுக்கு உரிமை உண்டு.

– திருத்தந்தை புனித இரண்டாம் ஜோன் போல்







### இன்றைய இறைவார்த்தை:

திப: 4: 8-12

திபா: 118: 1, 8, 9, 21-23, 26, 28-29

1 யோ: 3: 1-2

யோ: 10: 11-18

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2024

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org